முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 1/2020

அரசுதரப்பு 7-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராயர் | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 13.12.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது கிராம உதவியாளராக பணியில் இருந்து தற்போது ஓய்வு பெற்று கீழிருப்பு கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளில் உயரமாக இருப்பவரை பார்த்திருப்பதாக சொல்கிறார். (நவீன் ). 21.12.2018 அன்று வீஏஓ ஆபிசில் இருந்தபோது காடாம்புலியூர் காவல் ஆய்வாளர் போன் செய்து வரசொன்னதாக சொன்னதின்பேரில் விஏஓ என்னையும் அழைத்து சென்றார். அப்போது நானும் விஏஓவும் காடாம்புலியூர் காவல்நிலையம் சென்றோம். பஸ் அடித்தது சம்மந்தமாக விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். உயரமாக இருந்த நவீன் என்பவர் பஸ்ஸை அடித்து உடைத்ததாக காவல் ஆய்வாளரிடம் சொன்னார். அப்போது நானும், விஏஓவும் காவல்நிலையத்தில் இருந்தோம். மறுபடியும்

என்னையும் விஏஓவையும் நெய்வேலிக்கு அழைத்து சென்றார்கள். அவருடைய சொந்தக்காரர் வீட்டில் கருப்பு வண்டி இருப்பதாக சொன்னதின்பேரில் நாங்கள் அந்த இடத்திற்கு சென்றோம். அங்கிருந்து வண்டியை எடுத்து கொண்டு திரும்பவும் காடாம்புலியூர் வந்தோம். A1 கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ. 7 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்தும் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ. 8 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - காடாம்புலியூர் காவல்நிலையத்திலிருந்து ஆய்வாளர் போன் செய்தார். காலை 10.00 மணிக்கு போன்செய்தார்கள். 21.12.2018 அன்று போன் செய்தார்கள். விஏஓ, தாசில்தாரிடம் காவல்நிலையம் செல்ல அனுமதி வாங்கினாரா என்று தெரியாது. எத்தனை கையெழுத்து போட்டேன் என்று தெரியாது. இதே எதிரி சம்மந்தப்பட்ட வழக்கில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளேன். போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், என் முன்னால் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. காண்பிக்கப்பட்ட ஆவணங்கள் எல்லாம் காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 1 /2020

அரசுதரப்பு 8 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேகர் | வயது | : | 60 |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 13.12.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் துணை மேலாளராக இருந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். 11.12.2018 அன்று தஞ்சாவூரில் துணை மேலாளராக இருக்கும்போது அன்று மாலை 5.00 மணியளவில் TN 68 N 0635 என்ற எண்ணுள்ள பேருந்து காடாம்புலியூர் அருகே தாமரைகுளம் கிருஷ்ணா நகர் அருகில் தெற்கிலிருந்து வடக்கே சென்றபோது ஓட்டுநரின் வலதுபுறத்திலிருந்து எதிர் திசையில் வந்த 3 பேர் அமர்ந்து இருசக்கரவாகனத்தில் வந்தவர்கள் பேருந்தின் முன்புற கண்ணாடியை சேதப்படுத்தியதாக தகவல் தெரிந்தது. மேற்படி தகவல் தெரிந்தவுடன் நடத்துனர், ஓட்டுநரை காவல்நிலையம் சென்று புகார் கொடுக்க அறிவுறுத்தப்பட்டது. காவல்துறை அறிவுறுத்தலின்படி மேற்படி பேருந்து பண்ருட்டி மோட்டார் வாகன



ஆய்வாளர் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. சேதமதிப்பு ரூ.8000/- என்று நான்

சான்றளித்தேன். அந்த சேதமதிப்பு சான்று அசாஆ. 9 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - பேருந்து தயாரிக்கப்பட்ட வருடம் அந்த சான்றில் குறிப்பிடப்படவில்லை. எனக்கு தகவல் கிடைக்கும்போது 5.00 மணி இருக்கும். பேருந்தை நான் பார்க்கவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 1/2020

அரசுதரப்பு 9-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேசன் | வயது | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 13.12.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், தஞ்சாவூரில் உதவியாளராக ஓட்டுநர், நடத்துனர் பணிபதிவேடு அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் தஞ்சாவூரில் இருந்தேன். ஓட்டுநர் நடத்துனர் பணி ஒதுக்கீடு செய்வது என்பணி. 11.12.2018 அன்று TN 68 N 0635 தடம் 241 இ குமார் என்பவரை ஓட்டுநராகவும், பாலகிருஷ்ணனை நடத்துநராகவும் தஞ்சாவூரில் டிரிப் எடுத்து சென்னை சென்றார்கள். சுமார் 3.30 மணிக்கு தகவல் வந்தது. காடாம்புலியூர் பக்கத்தில் தாமரைகுளம் அருகே பஸ் கண்ணாடியை உடைத்து விட்டதாக தகவல் வந்தது. கிளைமேலாளருக்கு நாங்கள் தகவல் கொடுத்தோம். ட்யூட்டி போட்டதற்கு எழுத்துமூலமாக சான்று கொடுக்கவில்லை. பஸ்ஸை நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - கண்ணாடி உடைத்தார்கள் என்ற தகவல் 4.00 மணிக்கு வரபெற்றது. புகார் கொடுக்க நாங்கள் அறிவுறுத்தினோம். புகார் கொடுத்ததாக தகவல் சொன்னார்கள். மறுநாள்காலைதான் சொன்னார்கள்.